# கிருஷ்ணவேணி பஞ்சாலை

இந்த அமர்வின் முத்தாய்ப்பாக இயக்குநர் பாலுமகேந்திரா பேச்சு அமைந்தது. ‘‘வாழ்க்கையிலிருந்து, மக்களிடமிருந்து, மக்களுக்காக எடுக்கும் சினிமா நல்ல சினிமா. மொத்தத்தில் ரசனையோடு எடுக்கப்பட்டு போட்ட முதலீட்டை எடுக்கும் வகையில் ஓடக் கூடிய சினிமாவைச் சிறந்த சினிமா என்பேன்...’’ என்றார் அவர்.

இரண்டாம் நாள் படத்தின் தயாரிப்பாளர், இயக்குநர் தனபால் பத்மநாபன் படம் எடுத்ததன் நோக்கம், தேவை, அனுபவம் குறித்து மாணவர்களிடம் பேசினார். படத்தை மக்களிடம் கொண்டு செல்ல மேற்கொண்டுவரும் வழிகளையும் விளக்கினார். இதைத்தொடர்ந்து படத்தின் மார்க்கெட்டிங் மேலாளர் பிரகாஷ் எந்தெந்த வகையில் படத்தினை மக்களிடம் கொண்டு செல்ல முடியும் என்று திரையில் பவர்பாயிண்ட்டுடன் கூடிய விளக்கங்களை அளித்தார்.

‘பிரைம் பாயின்ட்’ சீனிவாசன் பல்வேறு சந்தைப்படுத்துதல் முறைகளை விளக்கினார். சமூக வலைதளங்கள் மற்றும் ஊடகங்களின் பலத்தையும், அவற்றைப் பயன்படுத்திக்கொள்ளும் விதத்தையும் அவர் சொன்னார். மேலும் சந்தைப்படுத்துவதில் ஏற்படும் தோல்விகளையும், அதற்கான தகவல் தொடர்பின்மை உள்ளிட்ட காரணங்களையும் விளக்கமாகப் பேசினார்.

மதுரையைச் சேர்ந்த திரைப்பட விநியோகஸ்தர் ராமகிருஷ்ணன், ‘‘என்னுடைய 25 வருட அனுபவத்தில் இதுபோன்ற ஒரு மார்க்கெட்டிங் முயற்சியைப் பார்த்ததில்லை. புதுமையான முயற்சிகளுக்கு ரசிகர்கள் நிச்சயம் ஆதரவளிப்பார்கள்’’ என்றார்.

முன்னாள் குடியரசுத்தலைவர் அப்துல் கலாமின் தனி செயலரும், அறிவியல் அறிஞருமான வி.பொன்ராஜ் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார். அவர், ‘‘எம்.ஜி.ஆர்.தான் மாஸ் ஊடகமான திரைப்படத்தை சரியாகப் பயன்படுத்திகொண்டார். நவீன வசதிகள் மக்களிடம் நம்மைக் கொண்டு செல்வதிலும், சந்தைப்படுத்துதலிலும் பெரிதும் உதவிவருகின்றன. இதைப் பயன்படுத்தி பெரிய அளவில் வெற்றி பெறமுடியும். இந்தப் பயிற்சியை உங்கள் வாழ்க்கைக்கான வழிகாட்டியாகக் கொண்டால் பல வாய்ப்புகள் தேடிவரும்’’ என்றார்.

‘கிருஷ்ணவேணி பஞ்சாலை’ படத்தின் கதாநாயகன் ஹேமச்சந்திரன் மாணவ, மாணவிகளின் கேள்விகளுக்கு பதில் அளித்தார். ‘இயக்குநரிடம் திட்டு வாங்கியதுண்டா’, ‘காதல் காட்சிகளில் சங்கடம் இருந்ததா’, ‘காதல் முன் அனுபவம் உண்டா’ என்று மாணவர்கள் கேட்ட துடுக்குத்தனமான கேள்விகளுக்கும் சிரித்துக்கொண்டே அவர் பதில் அளித்தார்.

‘‘இந்த ஒருமாத ‘இன்டர்ன்ஷிப் ப்ராஜக்ட்’ முடிந்ததும் அதில் மாணவர்களின் செயல்பாடு குறித்து மதிப்பிட்டு விருதுகள் வழங்கப்படும். தொடர்ந்து அவர்கள் வேலைவாய்ப்பு பெற நிறுவனங்களுக்கு அறிமுகம் செய்துவைப்போம்’’ என்றார் தனபால் பத்மநாபன். வேலைவாய்ப்பு பற்றிய இந்த இன்ப அதிர்ச்சியோடு, ஜெயிக்க முடியும் என்ற புதிய உத்வேகமும் உற்சாகமும் மாணவர்கள் முகங்களில் தெரிந்தது. இந்தப் பயிற்சி, எதிர்கால வாழ்க்கைக்கு வழிகாட்டியாக கேரியர் கைடன்ஸாக இருந்தாக பல மாணவர்கள் மகிழ்ச்சி பொங்க கூறினர்.